ராபி பருவம் தொடங்கியுள்ள நிலையில் கூட்டுறவு சங்கங்களில்

கடன் பெற முடியாமல் விவசாயிகள் தவிப்பு

■ கோவில்பட்டி

ராபி பருவம் தொடங்கியுள்ள நிலையில், நடப்பாண்டு அடங்கல் கேட்பதால் கூட்டுறவு சங்கங்களில் பயிர்க்கடன் பெற முடியாமல் விவசாயிகள் தவிக்கின்றனர்.

கோவில்பட்டி கோட்டத்துக்கு உட்பட்ட கயத்தாறு, கழுகுமலை, ஓட்டப்பிடாரம், விளாத்திகுளம், புதூர், எட்டயபுரம் சுற்று வட்டார பகுதிகளில் விவசாய நிலங்கள் அதிகம் உள்ளன. ஆண்டு தோறும் புரட்டாசி மாதம் பெய்யக்கூடிய பருவ மழையின் போது சிறுதானியங்கள், பயறு வகைகள், எண்ணெய் வித்துகள், மூலிகை வித்துகள், பணப்பயிர்கள் என பல்வேறு வகையான பயிர்கள் சாகுபடி செய்யப்படுகின்றன.

உழுது, பண்படுத்தி, விதைத்து, களை பறித்து, மகசூல் அறுவடை செய்வதற்கு ஏக்கருக்கு ரூ.15 ஆயிரம் முதல் ரூ.25 ஆயிரம் வரை செலவு ஏற்படுகிறது. இதனால் விவசாயிகள் அடிப்படை உழவு செய்து விதைகள், அடி உரம் வாங்குவதற்காக தமிழக அரசு விவசாயிகளுக்கு ஓராண்டுக்கு வட்டியில்லாமல் பயிரிடக்கூடிய பயிரின் செலவுக்கேற்ப பயிர்க்கடன் வழங்குகிறது. இதற்கு விவசாயிகள் தங்களது பட்டா மற்றும் முந்தைய ஆண்டு பெறப்பட்ட பயிர் அடங்கல் ஆகியவற்றை வழங்க வேண்டும்.

நடப்பாண்டு அடங்கல்

வழக்கம்போல் கடந்தாண்டு பயிர்க்கடன் பெற்ற விவசாயிகள் குறிப்பிட்ட கால தவணைக்குள் செலுத்தி விட்டு மீண்டும் இந்தாண்டு பயிர்க்கடன் பெறுவதற்கு சம்பந்தப்பட்ட தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கங்களில் பயிர் அடங்கல் கொடுத்து கடன் கேட்டனர். அதற்கு கூட்டுறவு கடன் சங்க செயலர்கள் முந்தைய ஆண்டு பயிர் அடங்கலை ஏற்றுக் கொள்ள முடியாது. நடப்பு பயிர் அடங்கல் கிராம நிர்வாக அலுவலரிடம் பெற்று வந்தால் மட்டுமே கடன் வழங்க முடியும் என கூறி கடன் வழங்க மறுக்கின்றனர். ராபி பருவம் தொடங்கி உள்ள நிலையில் பயிர்க்கடன் பெற முடியாததால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

ஆட்சியர் தலையிட வேண்டும்

இதுகுறித்து கரிசல்பூமி விவசாயிகள் சங்க தலைவர் அ.வரதராஜன் கூறியதாவது:

வருவாய் துறையில் நடப்பாண்டு பயிர் அடங்கல் கேட்டால், விதைப்பு செய்து பயிர் முளைத்து கணக்கெடுப்பு செய்த பின்னரே நவம்பர் மாதம் தான் பயிர் அடங்கல் வழங்க முடியும் என்கின்றனர். பருவத்தில் பயிர் செய்யும் பொருட்டு விதை, உரம், உழவு அடிப்படை செலவுக்காக வழங்கப்படுவதே பயிர்க்கடன் ஆகும். அதை விடுத்து நவம்பர் மாதம் பயிர் அடங்கல் பெற்று அதன் பின்னர் தான் பயிர்க்கடன் பெற முடியும் என்றால் பருவத்தில் விவசாயிகளால் விதைப்பு செய்ய முடியாது.

வருவாய் துறையும், கூட்டுறவு துறையும் விவசாயிகளை பந்தாடுகின்றன. இத்தனை ஆண்டுகள் பயிர்க்கடன் வழங்கிய நிலையில் இந்தாண்டு மட்டும் விதிமுறைகளை மாற்றி பயிர்க்கடன் விவசாயிகளுக்கு வழங்கக் கூடாது என்ற நோக்கத்தில் இது போன்ற நடைமுறை சிக்கல்களை வேண்டுமென்றே வகுத்துள்ளதாக எண்ணுகிறோம்.

எனவே, மாவட்ட ஆட்சியர் பயிர்க்கடன் விஷயத்தில் தலையிட்டு காலம் தாழ்த்தாமல் முந்தைய ஆண்டு பயிர் அடங்கலுக்கு கூட்டுறவு கடன் சங்கங்கள் பயிர்க்கடன் வழங்க உத்தரவு பிறப்பிக்க வேண்டும்,'' என்றார்.

பாளையங்கோட்டை கேடிசி நகரில் சப்-ஜூனியர் இறகு பந்து போட்டி தொடக்க விழா நடைபெற்றது. படம்: மு. லெட்சுமி அருண்

பாளை.யில் மாநில அளவிலான இறகு பந்து போட்டி தொடக்கம்

■ திருநெல்வேலி

பாளையங்கோட்டையில் மாநில அளவிலான சப்-ஜூனியர் இறகு பந்து போட்டிகள் தொடங்கின.

திருநெல்வேலி மாவட்ட இறகு பந்து கழகம் மற்றும் தமிழ்நாடு இறகு பந்து கழகம் இணைந்து நடத்தும் 17 வயதுக்கு உட்பட்டோருக்கான மாநில அளவிலான சப்-ஜூனியர் இறகுபந்து போட்டிகள் தொடக்க விழா பாளையங்கோட்டை கேடிசி நகரில் உள்ள டார்லிங் நகர் மாநகராட்சி உள் விளையாட்டு அரங்கில் நடைபெற்றது.

திருநெல்வேலி மாவட்ட இறகு பந்து கழக தலைவர் லயனல் ராஜ் வரவேற்றார். மத்திய ஜிஎஸ்டி இணை ஆணையர் கவிதா தொடங்கி வைத்தார். திருநெல்வேலி மாவட்ட விளையாட்டு அலுவலர் கிருஷ்ணா சக்கரவர்த்தி தலைமை வகித்தார். தமிழ்நாடு இறகு பந்து கழக செயற்குழு உறுப்பினர் பிரதீப் முன்னிலை வகித்தார். திருநெல்வேலி மாவட்ட இறகு பந்து கழக செயலாளர் ரவீந்திரன் நன்றி கூறினார்.

இந்த போட்டிகள் வரும் 9-ம் தேதி வரை 6 நாட்கள் நடைபெறுகிறது. 700-க்கும் மேற்பட்ட வீரர், வீராங்கனைகள் பங்கேற்றுள்ளனர்.

அம்பாசமுத்திரத்தில்

போதை பொருள் எதிர்ப்பு மனித சங்கிலி

■ திருநெல்வேலி

திருநெல்வேலி மாவட்டம் அம்பாசமுத்திரம் வட்டாட்சியர் அலுவலகம் முன்பு போதை பொருள் எதிர்ப்பு விழிப்புணர்வு மனித சங்கிலி நடைபெற்றது.

அம்பாசமுத்திரம் வட்டத்தில் உள்ள 7 அரசு மற்றும் அரசு உதவி பெறும் மேல்நிலைப் பள்ளிகளின் நாட்டு நலப்பணித் திட்ட அமர்வுகளின் சார்பாக நடைபெற்ற இந்த மனித சங்கிலி நிகழ்ச்சிக்கு இசக்கிசுப்பையா எம்எல்ஏ தலைமை வகித்தார். திருநெல்வேலி மாவட்ட நாட்டு நலப்பணித் திட்ட தொடர்பு அலுவலர் ஏ.கே. ஆறுமுகசாமி முன்னிலை வகித்தார். விக்கிரமசிங்கபுரம் சேனைத்தலைவர் மேல்நிலைப் பள்ளி நாட்டு நலப்பணித் திட்ட அலுவலர் எம். சாகுல் ஹுசைன் வரவேற்றார்.

அமலி மகளிர் பள்ளி நாட்டு நலப் பணித்திட்ட அலுவலர் மரிய இனிகோ விளக்க உரையாற்றினார். அம்பாசமுத்திரம் துணை வட்டாட்சியர் வின்சென்ட் ஜெயந்தி, கல்லிடைக்குறிச்சிதிலகர் வித்யாலயம் மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர் ஆர். சுபா, அம்பாசமுத்திரம் தீர்த்தபதி மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர் அழகிய நம்பி, சேனைத்தலைவர் மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர் சண்முக வேலாயுதம், அம்பாசமுத்திரம் காவல் ஆய்வாளர் சண்முகவேல் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

நாட்டு நலப்பணித் திட்ட அலுவலர் சங்கரராமன், போதைப் பொருளுக்கு எதிரான உறுதிமொழி வாசித்தார். நாட்டு நலப்பணித் திட்ட அலுவலர் செல்வ குமரன் நன்றி கூறினார். நாட்டு நலப்பணித் திட்ட அலுவலர் எஸ். சிவ பாலா தொகுத்து வழங்கினார்.

ராதாபுரம் கால்வாயில் தண்ணீர் திறக்க வலியுறுத்தல்

■ திருநெல்வேலி

ராதாபுரம் கால்வாயில் தண்ணீர் திறக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று முன்னாள் மத்திய இணையமைச்சர் ஆர். தனுஷ்கோடிஆதித்தன் வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்ட அறிக்கை:

ராதாபுரம் கால்வாயில் 110 கனஅடி தண்ணீர் 3 மாதங்களுக்கு திறக்க அரசு உத்தரவிட்டும் முறையாக தண்ணீர் வரவில்லை. இதனால் இந்த கால்வாய்க்கு உட்பட்ட 52 பாசன குளங்களில் ஒன்றுகூட நிரம்பவில்லை. காமராஜர் ஆட்சி காலத்தில் வறட்சியான ராதாபுரம் தொகுதிக்கு பாசன வசதிகளை வழங்குவதற்காக ராதாபுரம் கால்வாய் உருவாக்கப்பட்டது. எனவே, இந்த கால்வாயில் தண்ணீர் திறக்கப்படுவதை அரசு உறுதி செய்ய வேண்டும்.

கூடங்குளம் அணுமின் நிலையம் மற்றும் மகேந்திரகிரி ராக்கெட் தளங்களில் சி மற்றும் டி பிரிவு பணியாளர்கள் தேர்வில் நிலம் கொடுத்தவர்களுக்கும், உள்ளூர் மக்களுக்குமே முன்னுரிமை வழங்க வேண்டும். இதுபோல் ஆண்டுதோறும் நிரப்பப்படும் அப்ரண்டீஸ் பணிகளும் உள்ளூர் இளைஞர்களை கொண்டே நிரப்ப வேண்டும்.

மத்திய அரசு திட்டமிட்டுள்ள தூத்துக்குடி- கன்னியாகுமரி புதிய தேசிய நெடுஞ்சாலை எண் 32, லெவிஞ்சிபுரம் ஊராட்சி கருங்குளம் அருகே ஏற்கெனவே உள்ள கன்னியாகுமரி- மதுரை தேசிய நெடுஞ்சாலையில் சந்திக்கிறது. எனவே, பொதுமக்களுக்கு பாதிப்பு இல்லாத வகையில் முறையாக திட்டமிட்டு பணிகளை தொடங்க வேண்டும். இப்பகுதியில் வீடுகளை அகற்றி நிலங்களை கையகப்படுத்தும் முயற்சியை கைவிட வேண்டும் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கார் மோதி முதியவர் உயிரிழப்பு

■ தென்காசி

தென்காசி மாவட்டம், ஆலங்குளம் அருகே உள்ள மருதம்புத்தூரைச் சேர்ந்தவர் இசக்கி முத்து (70). இவர் சமீபத்தில் வீட்டை விட்டு வெளியேறி, ஆலங்குளம் பகுதியில் யாசகம் பெற்று வாழ்ந்து வந்துள்ளார். சமீபத்தில் விபத்தில் சிக்கியதால் காலில் காயம் ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில், நேற்று திருநெல்வேலி-தென்காசி நான்குவழிச் சாலையில் ஆலங்குளம் பேருந்து நிலையத்தில் இருந்து எதிர்திசையில் உள்ள சாலைக்கு செல்ல முயன்றுள்ளார். சாலையை கடந்து செல்ல முயன்றபோது, அந்த வழியாக வந்த கார் மோதியது. இதில் அவர் உயிரிழந்தார். ஆலங்குளம் போலீஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

சிவகுருநாதபுரம் பள்ளியில் மருத்துவ முகாம்

■ தென்காசி

சுரண்டை, சிவகுருநாதபுரம் அரசு மேல்நிலைப் பள்ளியில் நலம் காக்கும் ஸ்டாலின் திட்டத்தில் பன்நோக்கு மருத்துவ முகாம் நடைபெற்றது. தென்காசி மாவட்ட ஆட்சியர் ஏ.கே.கமல் கிஷோர், டாக்டர் ராணி ஸ்ரீகுமார் எம்.பி., சட்டப்பேரவை உறுப்பினர் எஸ்.பழனிநாடார் ஆகியோர் பார்வையிட்டனர். முகாமில் பயனாளிகளுக்கு மருத்துவ பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

மாவட்ட சுகாதார அலுவலர் கோவிந்தன், நலப்பணிகள் இணை இயக்குநர் பிரேமலதா, தொழிலாளர் உதவி ஆணையர் அ.சி.கவுரி ஜெனிபர், வட்டார மருத்துவ அலுவலர் ராஜ்குமார், வட்டார சுகாதார மேற்பார்வையாளர் ஸ்ரீமூலநாதன், சுரண்டை நகராட்சி தலைவர் வள்ளி முருகன், நகராட்சி ஆணையாளர் ராமதிலகம் கலந்துகொண்டனர்.

அனுமதியின்றி வைத்துள்ள துப்பாக்கிகளை நவ.30-க்குள் ஒப்படைக்க வேண்டும்

தென்காசி மாவட்ட வன அலுவலர் உத்தரவு

■ தென்காசி

தென்காசி மாவட்ட வன அலுவலர் ரா.ராஜ்மோகன் அறிக்கை:

தென்காசி மாவட்டம், மேற்குத் தொடர்ச்சி மலை அடிவாரப் பகுதி வனம் மற்றும் வனவிலங்குகள் நிறைந்து காணப்படுகிறது. இயற்கை நமக்கு அளித்துள்ள வன வளங்களையும், வன விலங்குகளையும் காப்பது இந்திய அரசியல் சாசனத்தின்படி அடிப்படை கடமையாகும். எனவே, வன விலங்குகளை வேட்டையாடுவதை தடுக்கும்பொருட்டு அனுமதி இல்லாத துப்பாக்கி வைத்திருக்கும் நபர்கள் மற்றும் வனவிலங்கு வேட்டையில் ஈடுபடும் நபர்களை கண்டறிய புலனாய்வு பணி நடைபெற்று வருகிறது.

அனுமதி இல்லாத துப்பாக்கி வைத்திருக்கும் நபர்கள் தாமாக முன் வந்து துப்பாக்கியை ஒப்படைக்க நவம்பர் 30-ம் தேதி வரை காலக்கெடு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்த காலக்கெடுவுக்குள் தென்காசி மாவட்டத்தில் தங்கள் அருகில் உள்ள வனச்சரக அலுவலர்களிடம் சட்ட நடவடிக்கை ஏதுமின்றி துப்பாக்கி ஒப்படைப்பு செய்துகொள்ள வாய்ப்பு வழங்கப்படுகிறது. இந்த வாய்ப்பில் அனுமதி பெற்ற துப்பாக்கியையும் அரசிடம் திரும்ப ஒப்படைக்க விரும்பும் நபர்கள் ஒப்படைக்கலாம்.

மேலும், வன உயிரினபதப்படுத்தப்பட்ட பொருட்கள், கொம்புகள், நகங்கள், பல், தோல் மற்றும் வனவிலங்கு தொடர்பான அனைத்து பொருட்களையும் தானாக முன்வந்து ஒப்படைக்கும் பட்சத்தில் வழக்குகள் ஏதுமின்றி ஏற்றுக்கொள்ளப்படும். இந்த வாய்ப்பை தகுதியுள்ள நபர்கள் பயன்படுத்திக்கொள்ளலாம்.

மேலும் விவரங்களுக்கு, tenkasidfo@gmail.com என்ற இணையதள முகவரியிலும், மாவட்ட வன அலுவலக கட்டுப்பாட்டு அறை எண்-04633233550, சிவகிரி-04636298523, புளியங்குடி-04636235853, கடையநல்லூர் -04633210700, குற்றாலம்-04633298190, தென்காசி -04633233660, ஆலங்குளம் – 04633293855 ஆகிய எண்களிலும் தொடர்பு கொள்ளலாம்.

மணப்பந்தல்
மணமகன் தேவை
தமிழ்
Tamil Hindu SC,AD, 38/153cm Visagam, Government Job, First marriage, seeks suitable never married groom. Ct:9600433867

வரி விளம்பரங்கள்
வீடு / நிலம்
இடம் விற்பனைக்கு
இடம் விற்பனைக்கு
திருநெல்வேலி, வண்ணார்பேட்டை, காவேரி மருத்துவமனை பின்புறம்,
9.93 சென்ட்
கார்னர் பிளாட்
DTCP அனுமதி பெற்றது
புரோக்கர்கள் தவிர்க்கவும்
வீடுகள் மற்றும் வணிகத்தளங்களுக்கு ஏற்றது
9543841119
8939845872

பொது
விற்பனை
EASYTECH CCTV CAMERA
ஈஸிடெக் செக்யூரிட்டி சென்டர்
AN ISO 9001-2008 COMPANY
இலவச டெமோவிற்கு அழைக்கவும்
74488 88907
95009 30200
www.easytechcctv.com

இந்து தமிழ் திசை
பொறுப்பல்ல: இந்தச் செய்தித்தாளில் பிரசுரம் ஆகியுள்ள விளம்பரங்களின் அடிப்படையில் செயல்படுமுன், அவற்றில் உள்ள தகவல்கள் சரியானவைதானா என்பதை போதுமான அளவு விசாரித்து சரிபார்த்துக்கொள்ளுமாறு வாசகர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். விளம்பரங்கள்/ விளம்பரதாரர் / அவர்களின் தயாரிப்புகள் / சேவைகள் போன்றவற்றின் நம்பகத்தன்மைக்கு இந்தச் செய்தித்தாளின் உரிமையாளரும் பதிப்பாளருமான கஸ்தூரி & சன்ஸ் லிமிடெட் / கே.எஸ்.எல். மீடியா லிமிடெட் உத்தரவாதம் அளிக்கவில்லை. இந்தச் செய்தித்தாளில் வெளியாகும் விளம்பரங்களால் ஏதேனும் சேதம் அல்லது இழப்பு ஏற்படும் பட்சத்தில், இந்தச் செய்தித் தாளின்/ மேற்சொன்ன நிறுவனங்களின் உரிமையாளர், பதிப்பாளர், அச்சிடுவோர், ஆசிரியர், இயக்குநர்கள், ஊழியர்கள் ஆகியோர் எந்தச் குழலிலும் எந்த வகையிலும் அதற்குப் பொறுப்பாகமாட்டார்கள்.
படைப்புகளை அனுப்புவோர் பிரதி எடுத்துவைத்துக்கொண்டு அனுப்பவும். பிரசுரமாகாதவற்றைத் திரும்ப அனுப்ப இயலாது.

केनरा बैंक Canara Bank
भारत सरकार का उपक्रम A Government of India Undertaking
सिंडिकेट Syndicate

கனரா வங்கி, சொத்து மீட்பு மேலாண்மை கிளை, செயின்ட் மேரிஸ் வளாகம், வட்ட அலுவலகம், முதல் தளம், கீழ வெளி வீதி, மதுரை-625001.

விற்பனை அறிவிப்பு (அசையா சொத்துக்கள் விற்பனைக்கான மின்னணு ஏல விற்பனை அறிவிப்பு)

பிணைக்காப்பு, நிதிச் சொத்து மறுசீரமைப்பு, பிணைச் சொத்து பாதுகாப்பு அமலாக்கச் சட்டம் 2002 & பிணைக் காப்பு (அமலாக்கம்) விதிகள் 2002-இன் விதி 8(6)-இன் கீழ் அசையாச் சொத்துக்களின் விற்பனைக்கான மின்னணு ஏல விற்பனை அறிவிப்பு. இதன் மூலம் பொது மக்கள் & குறிப்பாக கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடன்தாரர்(கள்), ஜாமீன்தாரர்(கள்) மற்றும் அடமானதாரர்(கள்) ஆகிய அனைவருக்கும் அறிவிப்பது யாதெனில், எங்கள் வங்கியின் கடன்தாரர் **திருமதி.எலிசி லாரன்ஸ்** & இணைக் கடன்தாரர்கள் – **திரு.எபின் லால் லாரன்ஸ்** & **திரு.லாரன்ஸ் பாலையன்** ஆகியோர் மதுரை சொத்து மீட்பு மேலாண்மை கிளைக்கு செலுத்த வேண்டிய கடன் நிலுவைத் தொகை 30.09.2025 அன்று ரூ.**32,99,433.96** (ரூபாய் முப்பத்து இரண்டு இலட்சத்து தொன்னூற்று ஒன்பதாயிரத்து நாநூற்று முப்பத்து மூன்று & பைசா தொன்னூற்று ஆறு மட்டும்) + 01.10.2025 முதல் வட்டி & பிற செலவினங்கள் சேர்த்து வங்கி வசூலிக்கும் பொருட்டு, கனரா வங்கி, நட்டாலம் கிளையின் அங்கீகாரம் பெற்ற அதிகாரியால் அடையாள உடமையாக்கப்பட்டுள்ள பின்வரும் அசையா சொத்தினை, **"எங்கு உள்ளதோ", "எப்படி உள்ளதோ", "எந்நிலையில் உள்ளதோ அப்படியே"** என்ற முறையில் **22.10.2025** அன்று மின்னணு ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளது.

அசையா சொத்து விவரம் : திருமதி.எலிசி லாரன்ஸ் பெயரில் உள்ள சொத்து.
கன்னியாகுமரி மாவட்டம், அருமனை பதிவு சார் மாவட்டம், விளவங்கோடு தாலுகா, வெள்ளம்கோடு கிராமம் (தற்போது முழுகோடு), பழைய சர்வே எண்.3170, ரீ-சர்வே எண்.394/3, பழைய கதவு எண்.10-56, தொட்டிவிளை, மாத்தூர்கோணம், அருமனை-629151, ரீ-சர்வே எண்.394/3-இல் உள்ள 3.5 சென்டுகள் (141.65 சதுர மீட்டர்கள்) நிலத்தில் அமைந்துள்ள சொத்து & அதன் அனைத்து பகுதிகளும். **நான்கு மால் :** கிழக்கே-திரு.லாரன்ஸ் சொத்து, மேற்கே-திரு.செல்லப்பன் சொத்து, தெற்கே-திருமதி.ஆனந்தவல்லியம்மா சொத்து, வடக்கே-ரோடு.

நிர்ணயிக்கப்பட்ட விலை : ரூ.**22,75,000/-** (ரூபாய் இருபத்து இரண்டு இலட்சத்து எழுபத்தைந்தாயிரம் மட்டும்)
முன்வைப்புத் தொகை : ரூ.**2,27,500/-** (ரூபாய் இரண்டு இலட்சத்து இருபத்தேழாயிரத்து ஐநூறு மட்டும்)

ஏல விற்பனை தேதி : 22.10.2025.
முன் வைப்புத் தொகை செலுத்துவதற்கு கடைசி நாள் 21.10.2025 மாலை 4.00 மணி வரை

விரிவான விற்பனை விதிகள் & நிபந்தனைகளுக்கு வங்கியின் இணையதள முகவரியான "https://baanknet.com/" என்ற லிங்க்கில் சென்று பார்க்கவும் அல்லது **கனரா வங்கி, மதுரை சொத்து மீட்பு மேலாண்மை கிளை, முதன்மை மேலாளரை** (தொலைபேசி எண் : **0452-2335348**, அலைபேசி எண் : **94890 46509**) அனைத்து வேலை நாட்களிலும் வேலை நேரத்தில் அணுகித் தெரிந்து கொள்ளலாம்.

நாள் : 03.10.2025
இடம் : மதுரை
அங்கீகாரம் பெற்ற அதிகாரி
கனரா வங்கி

केनरा बैंक Canara Bank
भारत सरकार का उपक्रम A Government of India Undertaking
सिंडिकेट Syndicate

கனரா வங்கி, சொத்து மீட்பு மேலாண்மை கிளை, செயின்ட் மேரிஸ் வளாகம், வட்ட அலுவலகம், முதல் தளம், கீழ வெளி வீதி, மதுரை-625001.

விற்பனை அறிவிப்பு (அசையா சொத்துக்கள் விற்பனைக்கான மின்னணு ஏல விற்பனை அறிவிப்பு)

பிணைக்காப்பு, நிதிச் சொத்து மறுசீரமைப்பு, பிணைச் சொத்து பாதுகாப்பு அமலாக்கச் சட்டம் 2002 & பிணைக் காப்பு (அமலாக்கம்) விதிகள் 2002-இன் விதி 8(6)-இன் கீழ் அசையாச் சொத்துக்களின் விற்பனைக்கான மின்னணு ஏல விற்பனை அறிவிப்பு. இதன் மூலம் பொது மக்கள் & குறிப்பாக கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடன்தாரர்(கள்), ஜாமீன்தாரர்(கள்) & அடமானதாரர்(கள்) ஆகிய அனைவருக்கும் அறிவிப்பது யாதெனில், எங்கள் வங்கியின் கடன்தாரர் :
1. திரு.A.ஆறுமுகசாமி, 2. திரு.R.ராஜா ஆகியோர் மதுரை சொத்து மீட்பு மேலாண்மை கிளைக்கு செலுத்த வேண்டிய கடன் நிலுவைத் தொகை 17.09.2025 அன்று **ரூ.53,78,733.05** (ரூபாய் ஐம்பத்து மூன்று இலட்சத்து எழுபத்தெட்டாயிரத்து எழுநூற்று முப்பத்து மூன்று & பைசா ஐந்து மட்டும்) + 18.09.2025 முதல் வட்டி & பிற செலவினங்கள் சேர்த்து வங்கி வசூலிக்கும் பொருட்டு, கனரா வங்கி, சங்கரன்கோவில் கிளையின் அங்கீகாரம் பெற்ற அதிகாரியால் கையகபடுத்தப்பட்டுள்ள பின்வரும் அசையா சொத்துக்களை, **"எங்கு உள்ளதோ", "எப்படி உள்ளதோ", "எந்நிலையில் உள்ளதோ அப்படியே"** என்ற முறையில் **23.10.2025** அன்று மின்னணு ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளது.
அசையா சொத்துக்களின் விவரம் : உரிமையாளர்-திரு.A.ஆறுமுகசாமி. சொத்து எண்.1 : ஐட்டம் எண்.1 : திருநெல்வேலி மாவட்டம், தென்காசி பதிவு மாவட்டம், புளியங்குடி சார் பதிவாளர் அலுவலகம், தலைவன்கோட்டை கிராமம், வார்டு 3, வ.உ.சி.தெரு, சர்வே எண்.434/15-இல் 82.56 சதுர மீட்டரில் கிழமேல் 8.6 மீட்டர், தென்வடல் 9.6 மீட்டர் கொண்ட சொத்தின் **நான்கு மால் :** வடக்கே-திருவாய்மொழித்தேவர் மனை, கிழக்கே-கோட்டூர்சாமி மனை & 2-ம் ஐட்ட மனை, மேற்கே-முத்துப்பாண்டி தேவர் மனை, தெற்கே-கிழமேல் தெரு. **ஐட்டம் எண்.2 :** திருநெல்வேலி மாவட்டம், தென்காசி பதிவு மாவட்டம், புளியங்குடி சார் பதிவாளர் அலுவலகம், தலைவன்கோட்டை கிராமம், வார்டு 3, வ.உ.சி.தெரு, சர்வே எண்.434/15-இல் 14.56 சதுர மீட்டரில் கிழமேல் 2.6 மீட்டர், தென்வடல் 5.6 மீட்டர் கொண்ட சொத்தின் **நான்கு மால் :** வடக்கே-திருவாய்மொழித்தேவர் மனை, கிழக்கே-கோட்டூர்சாமி மனை, மேற்கே-1-ம் ஐட்ட மனை, தெற்கே-கோட்டூர்சாமி மனை.

சொத்து எண்.1-இன் நிர்ணயிக்கப்பட்ட விலை : ரூ.**9,00,000/-** (ரூபாய் ஒன்பது இலட்சம் மட்டும்)
முன்வைப்புத் தொகை : ரூ.**90,000/-** (ரூபாய் தொன்னூறாயிரம் மட்டும்)

ஏல விற்பனை தேதி : 23.10.2025.
முன் வைப்புத் தொகை செலுத்துவதற்கு கடைசி நாள் 22.10.2025 மாலை 4.00 மணி வரை

விரிவான விற்பனை விதிகள் & நிபந்தனைகளுக்கு வங்கியின் இணையதள முகவரியான "https://baanknet.com/" என்ற லிங்க்கில் சென்று பார்க்கவும் அல்லது **கனரா வங்கி, மதுரை சொத்து மீட்பு மேலாண்மை கிளை, முதன்மை மேலாளரை** (தொலைபேசி எண் : **0452-2335348**, அலைபேசி எண் : **94890 46509**) அனைத்து வேலை நாட்களிலும் வேலை நேரத்தில் அணுகித் தெரிந்து கொள்ளலாம்.

நாள் : 04.10.2025
இடம் : மதுரை
அங்கீகாரம் பெற்ற அதிகாரி
கனரா வங்கி

केनरा बैंक Canara Bank
भारत सरकार का उपक्रम A Government of India Undertaking
सिंडिकेट Syndicate

கனரா வங்கி, சொத்து மீட்பு மேலாண்மை கிளை, செயின்ட் மேரிஸ் வளாகம், வட்ட அலுவலகம், முதல் தளம், கீழ வெளி வீதி, மதுரை-625001.

விற்பனை அறிவிப்பு (அசையா சொத்துக்கள் விற்பனைக்கான மின்னணு ஏல விற்பனை அறிவிப்பு)

பிணைக்காப்பு, நிதிச் சொத்து மறுசீரமைப்பு, பிணைச் சொத்து பாதுகாப்பு அமலாக்கச் சட்டம் 2002 & பிணைக் காப்பு (அமலாக்கம்) விதிகள் 2002-இன் விதி 8(6)-இன் கீழ் அசையாச் சொத்துக்களின் விற்பனைக்கான மின்னணு ஏல விற்பனை அறிவிப்பு.
இதன் மூலம் பொது மக்கள் & குறிப்பாக கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடன்தாரர்(கள்), ஜாமீன்தாரர்(கள்) மற்றும் அடமானதாரர்(கள்) ஆகிய அனைவருக்கும் அறிவிப்பது யாதெனில், எங்கள் வங்கியின் கடன்தாரர்கள் :
1. **M/s. செந்தூர் முருகன் ஸ்டோர்ஸ்** (உரிமையாளர்-லேட்.பண்டாரக்கண்ணு) & லேட்.பண்டாரக்கண்ணு அவர்களின் சட்டபூர்வ வாரிசுகளான **திருமதி.சீனியம்மாள், திருமதி.ராஜேஸ்வரி, திருமதி.தேவி பாலா, திருமதி.தங்கதுரைச்சி & திருமதி.சுதா** மற்றும் ஜாமின்தாரர்-**திரு.P.விஜயராஜன்,** த/பெ.பழனிச்சாமி ஆகியோர் மதுரை சொத்து மீட்பு மேலாண்மை கிளைக்கு செலுத்த வேண்டிய கடன் நிலுவைத் தொகை 30.09.2025 அன்று **ரூ.77,58,064.75** (ரூபாய் எழுபத்தேழு இலட்சத்து ஐம்பத்தெட்டாயிரத்து அறுபத்து நான்கு & பைசா எழுபத்தைந்து மட்டும்) + 01.10.2025 முதல் வட்டி & பிற செலவினங்கள் சேர்த்து வங்கி வசூலிக்கும் பொருட்டு, கனரா வங்கி, சங்கரன்கோவில் கிளையின் அங்கீகாரம் பெற்ற அதிகாரியால் அடையாள உடமையாக்கப்பட்டுள்ள பின்வரும் அசையா சொத்துக்களை, **"எங்கு உள்ளதோ", "எப்படி உள்ளதோ", "எந்நிலையில் உள்ளதோ அப்படியே"** என்ற முறையில் **23.10.2025** அன்று மின்னணு ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளது.
அசையா சொத்துக்களின் விவரம் : உரிமையாளர்-திரு.பண்டாரக்கண்ணு. திருநெல்வேலி மாவட்டம், தென்காசி பதிவு மாவட்டம், ஊத்துமலை சார் பதிவு அலுவலகம், மேலகலங்கல் கிராமம் (மேலக்கலங்கல் பஞ்சாயத்து வரம்பு) வார்டு எண்.2, பழைய நத்தம் சர்வே எண்.231/3, புதிய நத்தம் சர்வே எண்.308/1-ல் கட்டப்பட்டு கொண்டிருக்கும் வீடானது கிழமேல் 50 அடி, தென்வடல் 50 அடி, மொத்தம் 2500 சதுரடி = 232.26 சதுர மீட்டர் பரப்பில் உள்ளது. **நான்கு மால் :** வடக்கே-கிழமேல் தெரு, கிழக்கே-சரவணவேல் முருகையா & சந்திரசேகர் மனை, மேற்கே-ராமச்சந்திர வேலாயுத தேவர் & M.கந்தசாமி தேவர் மனை, தெற்கே-கிழமேல் தெரு.

நிர்ணயிக்கப்பட்ட விலை : ரூ.**7,40,000/-** (ரூபாய் ஏழு இலட்சத்து நாற்பதாயிரம் மட்டும்)
முன்வைப்புத் தொகை : ரூ.**74,000/-** (ரூபாய் எழுபத்து நான்காயிரம் மட்டும்)

ஏல விற்பனை தேதி : 23.10.2025.
முன் வைப்புத் தொகை செலுத்துவதற்கு கடைசி நாள் 22.10.2025 மாலை 4.00 மணி வரை

விரிவான விற்பனை விதிகள் & நிபந்தனைகளுக்கு வங்கியின் இணையதள முகவரியான "https://baanknet.com/" என்ற லிங்க்கில் சென்று பார்க்கவும் அல்லது **கனரா வங்கி, மதுரை சொத்து மீட்பு மேலாண்மை கிளை, முதன்மை மேலாளரை** (தொலைபேசி எண் : **0452-2335348**, அலைபேசி எண் : **94890 46509**) அனைத்து வேலை நாட்களிலும் வேலை நேரத்தில் அணுகித் தெரிந்து கொள்ளலாம்.

நாள் : 04.10.2025
இடம் : மதுரை
அங்கீகாரம் பெற்ற அதிகாரி
கனரா வங்கி

UJJIVAN SMALL FINANCE BANK
பதிவு அலுவலகம்: கிரேப் கார்டன், எண்.27, 3வது A குறுக்கு, 18வது மெயின், கோரமங்கலா 6வது பிளாக், கோரமங்கலா, பெங்களூர்-560095.
கிளை அலுவலகம்: எண்.2A, ஜோஸ் காம்ப்ளெக்ஸ், திலகர் புரம் மெயின் ரோடு, ராணி ஸ்கூல் அருகில், அம்பாசமுத்திரம், தமிழ்நாடு-627401

இ-ஏல விற்பனை அறிவிப்பு

கடனீட்டு சொத்துக்களை ரொக்கமாக்குதல் நிதிச்சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டு சொத்துக்கள் அமலாக்கச் சட்டம் 2002 பாதுகாப்பு நடைமுறை விதிகள் 2002 விதி எண். 8(6) & 9(1)-ன் கீழ் அசையா சொத்தின் இ-ஏல விற்பனை அறிவிப்பு.

SARFAESI சட்டம் 2002 பிரிவு 13(4) ன்கீழ் உஜ்ஜிவன் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்-ன் அங்கீகரிக